**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் MCOP.No.13/2018 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

பெயர் **கிறிஸ்டல் சுகந்தி**

க/பெ. மர்க்காஷிஸ் நிக்சன்

வயது 48

தொழில் **வீட்டு நிர்வாகம்**

**முதல் விசாரணை 09.07.2025**

நான் இந்த வழக்கில் 2ம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலமும், கூடுதல் பிரமாண வாக்குமூலமும் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 14.01.2017 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. 15.01.2017 தேதியிட்ட மார்காஷிஸ் நிக்சனின் திருப்போரூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட மரண அறிக்கை ம.சா.ஆ.2. 19.05.2017 தேதியிட்ட மார்காஷிஸ் நிக்சனின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3. 27.02.2017 தேதியிட்ட மார்காஷிஸ் நிக்சனின் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.4. 18.12.2016 தேதியிட்ட முதல் எதிர்மனுதாரர் தன்னுடைய வாகனத்தை 2வது எதிர்மனுதார் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டதற்கான காப்பீட்டு சான்றிதழ் ஒளி நகல் ம.சா.ஆ.5. 22.12.2015 தேதியிட்ட முதல் எதிர்மனுதாரருடைய (TN-11-Q-3838) என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.6. முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநகர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.7. 18.01.2017 தேதியிட்ட முதல் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம் செங்கல்பட்டு அவர்களால் வழங்கப்பட்ட விபத்து ஆய்வு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.8. 18.01.2017 தேதியிட்ட 3வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம் செங்கல்பட்டு அவர்களால் வழங்கப்பட்ட விபத்து ஆய்வு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.9. 06.11.2015 தேதியிட்ட மார்காஷிஸ் நிக்சனின் 2015-2016 மதிப்பீடு

ஆண்டிற்கான வருமான வரி செலுத்தியதற்கான சான்றாவணத்தின் அசல் ம.சா.ஆ.10. 2015-2016 வருமான வரி ஆண்டிற்கான விற்பனை விவர சுருக்கங்கள் மற்றும் வருமான வரி செலுத்தியதற்கான ஒப்புகை ரசீதுகள் அசல் ம.சா.ஆ.11. 2016-2017 வருமான வரி ஆண்டிற்கான விற்பனை விவர சுருக்கங்கள் மற்றும் வருமான வரி செலுத்தியதற்கான ஒப்புகை ரசீதுகள் அசல் ம.சா.ஆ.12. செங்கல்பட்டு உதவி அறுவை சிகிச்சை நிபுணர் அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்ட உடற்கூராய்வு சான்றிதழின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.13.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த விபத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் என் கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றேன். மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. எந்த காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் காப்பீட்டு பாலிசி உள்ளது. நான் காப்பீட்டு பாலிசியை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் இருசக்கர வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என் கணவருக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றால் சரியல்ல. என் கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் என்னை பின் சீட்டில் அமர வைத்து வண்டியை ஓட்டி விபத்தை வரவழைத்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தில் என்னுடன் மேலும் இருவரும் அமர்ந்து சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் 4 பேர் பின் சீட்டில் அமர்ந்து சென்றதால் என் கணவர் வாகனத்தை சரியாக ஓட்ட முடியாமல் விபத்திற்குள்ளானது என்றால் சரியல்ல. என் கணவரின் வாகனம் காரின் மீது மோதியது. இருசக்கர வாகனத்தின் தவறால் விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் தயாரித்த வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் நின்றுக்கொண்டிருந்த கார் மீது மோதி என் கணவரின் இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்து,

பின்னால் வந்த மற்றொரு கார் இடித்து விட்டு சென்றுவிட்டது. என் கணவரின் தம்பி புகார் கொடுத்தார். அவர் இந்த விபத்தை பார்க்கவில்லை. என் கணவரின் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு கொண்டு சென்றார். அந்த அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் என் கணவரின் இருசக்கர வாகனம் வேறொரு நபருக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி அறிக்கையில் அந்த வாகனத்தை கைப்பற்ற வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து முழுக்க, முழுக்க என் கணவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றும், 1 மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் விபத்திற்கு பொறுப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் ரீனா ஏஜென்சிஸ்-ல் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவ்வாறு வியாபாரம் செய்ததற்கான பதிவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தொழிலை தற்போது செய்யவில்லை. மேற்படி வியாபாரத்தை 2003ல் இருந்து செய்து கொண்டிருந்தோம். ஆனால் நான் 2015-2016 ஆண்டிற்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முந்தைய ஆண்டிற்காக வருமான வரி கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து முழுக்க, முழுக்க என் கணவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்பதால் எனக்கு எந்த விதமான நஷ்டஈடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**